# விவசாயவணிக அபிவிருத்தி :

## என்ன செய்யப்பட வேண்டியுள்ளது

### விவசாயவணிக முறைமை

விவசாயவணிக முறைமையானது உள்ளீடுகளின் நிரம்பல், வர்த்தக பண்ணை உற்பத்தி, மற்றும் பதனிடலும் விநியோகமும் ஆகிய மூன்று உப துறைகளை உள்ளடக்கியுள்ளது. உள்ளீடுகளின் நிரம்பல் என்பது நிலம், தொழிலாளர், இயந்திரம், தொழில்நுட்பம் போன்ற விவசாயவணிகத்துடன் தொடர்புடைய பொருளாதார நடவடிக்கைக்குத் தேவையான எதனினதும் கிடைப்பனவைக் குறிக்கின்றது. வர்த்தக பண்ணை உற்பத்தி என்பதன் கருத்து பிரதானமாக வர்த்தக நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் பண்ணை நடவடிக்கைகளாகும். பதனிடலும் விநியோகமும் என்பது விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பினையும் உள்நாடு மற்றும் சர்வதேச சந்தைகளில் அவற்றின் விநியோகத்தினையும் உள்ளடக்குகின்றது.

### விவசாயவணிகத்தின் பெறுமானச் சங்கிலித் தொடர்

இவ்வுப துறைகள் பல்வேறு உரித்துடையவர்களை விவசாயவணிகத்தின் பெறுமானச் சங்கிலித் தொடரில் இணைத்து விவசாயத் துறை மற்றும் கிராமிய பண்ணையல்லாத் துறையின் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்கின்றன. உற்பத்தியின் ஆரம்பக் கட்டத்தில் தொடங்கி நுகர்வில் முடிவடையும் பெறுமானச் சங்கிலித் தொடரின் வழியே உள்ளீடுகளை உபயோகித்தல், பயிரிடல், அறுவடை செய்தல், வகைப்படுத்துதல், களஞ்சியப்படுத்துதல், தயாரித்தல், பொதியிடல், கொண்டுசெல்லுதல், விநியோகித்தல் போன்ற பல்வேறு கட்டங்கள் ஊடாக உற்பத்தி கைமாறும் போது பெறுமானம் கூட்டப்படுகின்றது. விவசாயவணிக அபிவிருத்தியிலுள்ள வரையறைகள் முழு பெறுமானச் சங்கிலித் தொடருடனும் தொடர்புபட்டுள்ள ஒவ்வொரு உப துறைகள் தொடர்பாகவும் அடையாளம் காணப்படவேண்டும்.

### விவசாயவணிகத்தின் போட்டித்தன்மையான வளர்ச்சி

ஒரு கொடுக்கப்பட்ட கைத்தொழிலின் போட்டித்தன்மையான வளர்ச்சியினைத் தீர்மானிப்பதில் 4 காரணிகள் காணப்படுகின்றன. அவையாவன: காரணி நிலைமைகள், கேள்வி நிலைமைகள், தொடர்புபட்ட மற்றும் துணைபுரியும் கைத்தொழில்கள், நிறுவன தந்திரோபாயம், மற்றும் கட்டமைப்பும் பகைமையும். ஒரு கைத்தொழிலின் போட்டித்தன்மையான வளர்ச்சியினை பாதிக்கும் வரையறைகள் இக்காரணிகளில் ஏதேனும் ஒன்றுடன் இணைந்ததாகக் காணப்படலாம். மேலும், அரசாங்கமானது வரையறைகளைத் தளர்த்தியோ அல்லது இறுக்கியோ இவ்வனைத்துக் காரணிகள் மீதும் தாக்கம் ஏற்படுத்துவதன் மூலம் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றது.

### இலங்கையில் விவசாயவணிகம்

2008 ஆண்டு வெளியிடப்பட்ட குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கையின் படி இலங்கையில் 4725 விவசாயவணிக அலகுகள் காணப்படுகின்றன. இவை நாட்டின் விவசாயப் பகுதிகளைக்காட்டிலும் மேல் மாகாணத்திலேயே அதிகம் மையங்கொண்டவையாகக் காணப்படுகின்றன. மேல் மாகாணமானது விவசாய வணிக அலகுகளின் 32 வீதத்திற்கும் இத்துறையின் 38 வீத தொழில்வாய்ப்பிற்கும் வகைகூறுகின்றது. இத்துறையின் மொத்தக் கூட்டிய பெறுமதியில் 74 வீதம் பங்களிப்புச் செய்து மேல் மாகாணமானது நாட்டின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் விவசாயவணிகத்தில் அதிக விளைதிறனுடையதாகத் தோற்றமளிக்கின்றது. தற்போதைய நிலவரத்தின் படி விவசாய வணிகத்தில் 'சிறிய நிறுவனங்கள்' ஆதிக்கம் செலுத்துகின்றன. ஏனென்றால் ஏறக்குறைய 72 வீதமான விவசாயவணிக அலகுகள் 20 தொழிலாளர்களை விடவும் குறைவான தொழில்வாய்ப்பினைக் கொண்டுள்ளன.

2008 இல் மொத்த ஏற்றுமதியில் 23 வீதமாகக் காணப்படும் விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிகளின் பங்கானது கடந்த அண்மைய வருடங்களில் அதிகரித்துள்ளது. தேயிலை ஏற்றுமதிகள் விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிகளிற்கு அண்ணளவாக அரைவாசிக்குப் பங்களிப்புச் செய்கின்றன. தேயிலை ஏற்றுமதிகளின் பங்கானது 1995 இற்குப் பின்னரான காலப்பகுதியில் பெரும்பாலும் அதேயளவாக தொடர்ந்தும் காணப்பட்டது. இது தேயிலை ஏற்றுமதிகளின் முக்கியத்துவத்தினைக் குறைப்பதில் ஏனைய விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படவில்லை என்பதனைக் குறிக்கின்றது. இது பாரம்பரிய தேயிலைக் கைத்தொழிலை விஞ்சுவதில் தோல்வியடைந்துள்ள விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிகளின் மந்தமான செயலாற்றத்தினைக் காட்டுகின்றது.

සංවාද
SANVADA
சம்வாதம்
'POLICY BRIEF 18'
pathfinder Foundation
www.sanvada.org

## பாரம்பரிய விவசாயவணிகக் கொள்கைகள்

இலங்கை கடந்த சில தசாப்தங்களாக தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட பரந்த பாரம்பரிய விவசாயக் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் மரபுரிமையாகப் பெற்றுள்ளது. இக் கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் உத்தரவாத விலைகள், வளமாக்கி மற்றும் ஆலைகளை நவீனமயப்படுத்தும் மானியங்கள், சலுகைக் கடன், முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள், அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம், இலவச நீர்ப்பாசன வாய்ப்பு, அரசாங்கத்தின் ஆராச்சியும் அபிவிருத்தியும், அரசாங்கத்தின் விரிவாக்கல் சேவைகள், ஏற்றுமதி மேம்பாடு மற்றும் இறக்குமதிப் பதிலீட்டுக்கு ஆதரவான வர்த்தகக் கொள்கைகள், மற்றும் பல ஏனைய ஊக்குவிப்புக்களை இலக்காகக் கொண்டிருந்தன. அரசாங்கமானது உணவுப் பாதுகாப்பினை அடைவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல், தெரிவு செய்யப்பட்ட பணப்பயிர்களையும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளையும் மேம்படுத்துதல், கிராமிய உட்கட்டமைப்புக்களை மேம்படுத்துதல், மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை மேம்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபட்டிருக்கின்றது.

## மஹிந்த சிந்தனையின் வலியுறுத்தல்

மஹிந்த சிந்தனை எனப்படும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை விஞ்ஞாபனம் கிராமிய விவசாயம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் தனியார் துறையின் ஈடுபாடு மற்றும் விரிவாக்கல் சேவைகள் என்பவற்றை மேம்படுத்துவதற்கு அரச தலையீட்டுடன்கூடிய விவசாய அபிவிருத்தியை மேம்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றது. மஹிந்த சிந்தனையானது சீவனோபாய விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களுடன் இணைந்ததான உற்பத்தித்திறன் வாய்ந்த வர்த்தக முறைமையாக மாற்றுவதற்கு அரசாங்க முகவரகங்களுடன் இணைந்ததான சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களின் ஆற்றல் வாய்ந்த பங்களிப்பினை எதிர்பார்க்கின்றது. மேலும் அரசாங்கமானது விவசாயத்துறைக்கான ஊக்குவிப்புச் சூழலினையும் சந்தைநோக்கிய விலையிடல் பொறிமுறையினையும் அபிவிருத்தி செய்வதற்கான தேவையினையும் அடையாளம் காண்கின்றது. அதேநேரத்தில் அரசாங்கமானது இலக்கிடப்பட்ட உள்ளீட்டு மானியத்தினையும் இறக்குமதிப் போட்டியை எதிர்நோக்கும் பயிர்களுக்கான பாதுகாப்பின் தேவையையும் ஏற்றுக்கொள்கின்றது.

'ஒரு விவசாயத் துறையானது பிராந்திய ரீதியிலான நியாயத்தன்மையுடைய பொருளாதார வளர்ச்சி, கிராமிய வாழ்வாதார மேம்பாடு மற்றும் நுகர்வுக்கான பண்டங்களின் வினைத்திறனான உற்பத்தி ஊடான உணவுப்பாதுகாப்பு, விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், மற்றும் உலக சந்தைக்கு போட்டித்திறமையாக ஏற்றுமதிசெய்தல் என்பவற்றுக்குப் பங்களிப்புச் செய்கின்றது.'

மஹிந்த சிந்தனை

## விவசாயவணிகத்திற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்.

தொழில்நுட்ப மதிப்பீட்டுக்கான சர்வதேச மத்தியநிலையத்தினால் (ICTA) அமுல்படுத்தப்பட்ட e-Sri Lanka முன்முயற்சியானது நாட்டின் விவசாயவணிக அபிவிருத்திக்கான அண்மைக்கால தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) அணுகுமுறையாகும். தொழில்நுட்ப மதிப்பீட்டுக்கான சர்வதேச மத்தியநிலையத்தின் தொலைநோக்கு "தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பலாபலன்களை ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒவ்வொரு பிரஜைக்கும், ஒவ்வொரு வணிகத்திற்கும் எடுத்துச் செல்வதுடன் அரசாங்கத்தின் சிந்தனை மற்றும் தொழிற்படும் விதம் என்பவற்றினை மீள் இயக்குவதும்" ஆகும். e-Sri Lanka முன்முயற்சியானது விவசாயிகளுக்கு கிருமிகள் மற்றும் நோய்களிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பது தொடர்பான தகவல்களை உரிய நேரத்தில் பெறுதல், புதிய பயிர்ச்செய்கை நுட்பங்கள், எதிர்மறை அதிர்ச்சிகளுகளுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடியதும் அதிக விளைச்சலைத் தரக்கூடியதுமான புதிய பயிரின வகைகள் போன்ற வாய்ப்புக்களை வழங்குவதற்குத் திட்டமிடுகின்றது. ICT ஊடான மெய் நேரச் சந்தை விலைகளுக்கான வாய்ப்புக்கள் உயர்வருமானம் மற்றும் பரந்த சந்தை வாய்ப்புக்களை வழங்கும் முன் கொழுவினை மேம்படுத்துதல் என்பவற்றினை உற்பத்தியாளர்கள் பெறுவதற்கு அவர்களை இயலச்செய்கின்றது. விவசாயிகள் அவர்களின் சொந்த மொழிகளில் விகி கொவியா, மற்றும் நவ கொவியா போன்ற ICT நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் இணையம், குரல் அழைப்புக்கள், குறுந்தகவல் செய்தி, மற்றும் ஏனைய தொடர்பாடல் முறைகள் ஊடாக கணனி மற்றும் கையடக்கத் தொலைபேசி போன்ற சேவைகளைப் பெறுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

## பிரச்சினைகளும் கொள்கைகளும்

கைத்தொழிலின் போட்டித்தன்மைவாய்ந்த வளர்ச்சியினைத் தீர்மானிக்கும் காரணிகளைப் பொறுத்தவரையில் விவசாயவணிகத் துறையானது கவனத்திற் கொள்ளப்படாத பல வரையறைகளையும் சவால்களையும் எதிர்கொண்டுள்ளது.

## சிக்கல்வாய்ந்த காரணி நிலைமைகள்

காரணி நிலைமைகள் உற்பத்தித் திறன்வாய்ந்த காரணிகளின் கிடைப்பனவு மற்றும் கைத்தொழிலின் செயலாற்றத்தினைப் பாதிக்கும் பிரச்சினைகளுடன் தொடர்புபட்டுள்ளது. விவசாயவணிகம் எனும் விடயத்தினைப் பொறுத்தவரையில் தெளிவற்ற நில உடைமைக் கோலங்கள், சிக்கல் வாய்ந்த குத்தகை முறைமைகள், காலாவதியாகிவிட்ட நிலக் கொள்கைகள், தொழிலாளர் தொடர்பான பிரச்சினைகள், சிற்றளவு பயிர்ச்செய்கை என்பன விவசாய வணிக அபிவிருத்தியில் பிரதான வரையறைகளாக உள்ளன. இதைவிட, வரையறுக்கப்பட்ட அளவில் காணப்படும் விதையினங்கள், தரங்குறைந்த விதைகள் மற்றும் மூலப்பொருட்கள், ஆராச்சியும் அபிவிருத்தியும் போதியளவில் காணப்படாமை மற்றும் சந்தை வினைத்திறனின்மை என்பன நலிவான கைத்தொழில் செயலாற்றத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றன.

விவசாயவணிக அபிவிருத்திக்கான வரலாற்று ரீதியான கொள்கை உருவாக்கலில் போதியளவு கவனத்தில் கொள்ளப்படாமையினால் அடிப்படையான பலவீனங்கள் சில ஆழ வேரூன்றியவையாகக் காணப்படுகின்றன.தற்போதுள்ள நில உடைமைக் கோலங்கள், குத்தகை முறைமைகள், நிலக் கொள்கைகள், தொழிலாளர் தொடர்பான பிரச்சினைகள், என்பன மீளாய்வு செய்யப்படவேண்டியது அவசியமாகும். ஒரு நிலப்பாவனைக் கருத்திட்டமானது விவசாய உற்பத்தி, வீடமைப்பு மற்றும் நிலப்பாதுகாப்பு என்பவற்றினை அடையாளங்கண்டு எல்லையிடுவதன் மூலம் விருத்திசெய்யப்படவேண்டும். ஒத்துழைக்கும் பொறிமுறை நிரம்பல் சங்கிலித் தொடரினை விருத்தி செய்வதும் சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடலுக்காக சிற்றின விவசாயிகளை பெரிய விவசாய வணிகத்துடன் இணைப்பதும் மிகவும் முக்கியமானதாகும். அரச மற்றும் தனியார் பங்குபற்றுதலுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் தனியார் துறையின் ஈடுபாடு அடையாளம் காணப்படுவதுடன் புலமைச் சொத்துரிமையுடன் உறுதிப்படுத்தப்படவும் வேண்டும். சிறந்த தரமுடைய விதைகள் மற்றம் நடுகைக் கருவிகள் என்பவற்றைப் பெறுவதில் அரச மற்றும் தனியார் பங்குபற்றுதலுடன் கூடிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மீதான அதிக முதலீடு அவசியமாகும்.

## கேள்வி நிலைமைகளுக்கான மெதுவான பிரதிபலிப்பு

அபிவிருத்தியடைந்த சந்தை நிலைமைகளின் தாக்கம் மற்றும் உலக

நுகர்வோர் விருப்பத் தெரிவுகளிலேற்பட்ட மாற்றங்களினால் உருவான கேள்வி நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கம் வகையில் கைத்தொழிலானது சீராக்கம் செய்யப்படவேண்டும். சந்தை நிலைமைகளுக்கு விரைவாக ஈடுகொடுப்பதில் நிரம்பல் பக்க இறுக்க நிலைமைகள் காணப்படும் அதேவேளையில் தகவல்களின் மெதுவான செயன்முறையானது நுகர்வோர் பக்கத்தில் ஒரு வரையறையாகக் காணப்படுகின்றது. வெற்றிகரமான சந்தைப்படுத்தல் உபாயங்கள் கூட உலக நுகர்வோர் விருப்பத் தெரிவுகளை உருவாக்கலாம் என்பதனைக் கவனிப்பது அவசியமாகும்.

புத்தாக்கம் ஊடாக உற்பத்தியாளர்கள் சந்தைப் போக்குகளுக்கு அதிக தந்திரோபாய ரீதியிலும் நடைமுறைச் சாத்தியமான வகையிலும் பிரதிபலிப்பினைக் காட்டவேண்டும். ஆனால் இது சிற்றின உற்பத்தி மற்றும் தகவல் பாய்ச்சல் போதாமல் உள்ளமை மற்றும் உரிய நேரத்திற்குக் கிடைக்காமை என்பவற்றினால் பாதிக்கப்படுகின்றது. நில உரிமை மற்றும் நிலப் பாவனைக் கொள்கைகள் நீண்ட காலத்தில் சிற்றின விவசாயப் பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு உதவும் அதேவேளையில் சிற்றின விவசாயிகளுக்கும் பேரின விவசாய வணிக நிறுவனங்களுக்கும் இடையிலான பலப்படுத்தப்பட்ட இணைப்பு அவசியமானதாகும். இணையத்தினை அடைதலில் ஏற்படும் மேம்பாடு அதிகரித்த அலைவழி பரப்பின் ஊடான வேகம் தகவல் போதாமை பிரச்சினையிலிருந்து மீள்வதற்கு உதவும். இதனுடன் இணைந்ததாக, கணனிக் கல்வியானது விவசாய வணிகங்கள் ICT இன் உயர்ந்த பட்ச நன்மையினைப் பெறும் வகையில் மேம்படுத்தப்படவேண்டும்.

## நலிவான துணைபுரியும் நிலைமைகள்

தொடர்புடைய மற்றும் துணைபுரியம் கைத்தொழில்கள் வணிகச் செயலாற்றத்திற்குத் தேவையான பரந்தளவு சேவைகளை வழங்குகின்றன. இவை உட்டகட்டமைப்பு, பயன்தரு சேவை, போக்குவரத்து, தகவல், நிதிச் சேவைகள், விரிவாக்கல் சேவைகள், மற்றும் வணிக அபிவிருத்திச் சேவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இக்காரணிகளின் நலிவான நிலைமைகள் விவசாய வணிகத்திற்கு உயர் கொடுக்கல் வாங்கல் செலவுகளை எற்படுத்துகின்றன. ஒருங்கிணைக்கப்படாத, நீண்ட, பிளவடைந்துள்ள நிரம்பல் சங்கிலித் தொடர்களின் நிலவுகையானது இலங்கையின் விவசாய வணிகத்திற்கு அதிக தொகை ரீதியான மற்றும் தர ரீதியான இழப்புக்களை ஏற்படுத்துகின்றது.

விவசாயவணிகத்தின் நிரம்பல் சங்கிலித் தொடர்களைப் பாதிக்கும் அதிக வளர்ச்சித் தடைகளை நீக்குவதற்கும் விவசாய வணிகத்தின் கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் குறைப்பதற்கும் மேல் மாகாணத்திற்கு அப்பால் விவசாய வணிக நடவடிக்கைகளை நோக்கி அதிக முதலீட்டினைத் திருப்புவதற்கும் கிராமிய மற்றும் பிராந்திய பொருளாதாரங்களுடன் கொழும்பினை இணைக்கும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அவசியமானதாகும். செலவு குறைவான மாற்று வலு வடிவங்களை பயன்படுத்துவதும் சக்தி விநியோகம் மற்றும் நிர்வாகத்தினை மேம்படுத்துவதும் அவசியமானதாகும். தற்போது அரசாங்கத்தினால் வழங்கப்படும் விரிவாக்கல் சேவைகள் தாராளமயப்படுத்தப்படும் அதேவேளை தனியார் துறைக்கு அதன் சொந்த முயற்சியில் அல்லது அரச-தனியார் பங்குபற்றுதலுடன் விரிவாக்கல் சேவைகள் மற்றும் வணிக அபிவிருத்திச் சேவைகள் என்பவற்றில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும்.

## அரசாங்கத்தின் பங்களிப்பு: வசதியளிப்பதா அல்லது தடையேற்படுத்துவதா?

பொது நிர்வாகத்திலும் பணிக்குழு நடைமுறைகளிலும் காணப்படும் வினைத்திறனின்மை ஊடாக அரசாங்கத்தின் செல்வாக்கும் கொள்கைச் சூழலும் கைத்தொழிலைப் பாதிப்பதுடன் கைத்தொழிலினை போட்டித்திறனற்றதாகவும் ஆக்குகின்றன. தேசிய மட்டத்திலும் உள்;ர் மட்டத்திலும் தொழிற்படும் அதிகளவிலான நிறுவனங்கள் விவசாயத்துறை தொடர்பான பொறுப்புக்களை மேற்கொள்கின்றன. அரச தலையீடு என்னும் பாரம்பரிய வடிவத்தில் அரசாங்கங்கள் பரந்தளவிலான ஆதரவு வழிமுறைகளை அமுல்படுத்தியிருக்கின்ற போதிலும் விவசாயவணிகத்திற்கு உதவுதல் என்னும் விடயத்தினைக் கவனத்திற் கொள்ளும் போது அவற்றின் வினைத்திறனும் செயற்றிறனும் வரையறுக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன.

பரந்தளவிலான பாதுகாப்பு மற்றும் மானியங்கள் என்பன சீவனோபாய விவசாயத்திற்குக் காரணமாக இருப்பதுடன் உற்பத்தியின் உயர் அலகுச் செலவானது சீவனோபாய விவசாயம் போட்டித்தன்மை வாய்ந்த விவசாயவணிகத்துறையாக மாறுவதற்கும் தடையாக உள்ளது. சிறிய அளவிலும் சிதறியும் காணப்படும் உற்பத்தி அலகுகள் சந்தைப்படுத்தலில் பல கையாளல் பிரச்சினைகளுக்கு வழிவகுப்பதுடன் விவசாயவணிக அபிவிருத்தியினையும் தடுக்கின்றன. தனியார் துறையானது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அத்துடன் விரிவாக்கல் சேவைகளிலும் சிறிய பங்கினை வகிக்கும் அதேவேளையில் பற்றாக்குறையான வள ஒதுக்கீட்டுன்கூடிய விவசாயவணிக அபிவிருத்திக்குப் பொருத்தமான வகையில் தகவலினை வினைத்திறனாகவும் செயற்றிறனாகவும் வழங்கக்கூடிய அதிக இயலளவினை அரசாங்கத்தின் முன்முயற்சியானது கொண்டிருக்கவில்லை. பெரும்பாலான பயிற்சி பெற்ற மனித வளங்களும் ஆற்றல்களும் அரசாங்கத்திடம் தொடர்ந்தும் இருக்கின்றது. ஆனால் அரசாங்கம் விவசாயவணிகத் துறையுடன் சிறியளவிலான தொடர்பினையே கொண்டுள்ளது. அரசாங்கத்தினையும் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களையும் இணைக்கும் கைத்தொழிலானது பலவீனமாக உள்ளது. உண்மையில் அரச மற்றும் தனியார் பங்குபற்றுதல்கள் இலங்கையில் பெரும்பாலும் முறைசார் வகையில் காணப்படாத அதேவேளை வரையறுக்கப்பட்ட தொடர்புகள் முழுமையாக தனிப்பட்ட ரீதியிலேயே தொழிற்படுகின்றன.

விவசாயவணிகத் துறைக்கான வினைத்திறன் நன்மைகள் எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பணிக்குழு மற்றும் நிர்வாக நடைமுறைகள் ஊடாக பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கையினைக் கணிசமாகக் குறைப்பதன் மூலம் தருவிக்கப்படலாம். தற்போதைய மானிய முறைமையின் தேறிய நன்மைகளும் விவசாய அபிவிருத்திக்கான ஏனைய ஊக்குவிப்புக்களும் விவசாய வணிகத்தினை மேம்படுத்துவதைக் காட்டிலும் வினைத்திறனின்மையைத் தொடர்ச்சியாகக் கொண்டிருப்பதால் அவை மதிப்பீடு செய்யப்படவேண்டும். அரச மற்றும் தனியார் பங்குபற்றுதலின் அபிவிருத்தியானது அரசாங்கத்திற்கு அதன் மனித வளங்களையும் ஆற்றல்களையும் விவசாயவணிக அபிவிருத்திக்கு திருப்புவதில் ஒரு சந்தர்பத்தினை வழங்கும். தனியார் துறையினை உள்வாங்குவதற்கு விரிவாக்கப்படக்கூடிய ஓர் அணுகுமுறையானது தொடர்புடைய பொதுத் துறை நிறுவனங்களுடன் கூடிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றது.

## புலமைச் சொத்தும் மரபுவழிப் பண்பியல் சார்ந்த பிரச்சினைகளும்

நாடு மிகவும் செழிப்பு வாய்ந்த உயிரியல் பன்முகத் தன்மையினைக் கொண்டிருப்பதனால் பெருமிதங் கொள்ளலாம் என்ற போதும் நாங்கள் அதனை முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றோம். நாட்டின் புலமைச் சொத்துச் சட்டமானது விவசாயத்தில் புத்தாக்கங்களை போதுமான வகையில் பாதுகாக்கவில்லை.

தற்போதைய ஒழுங்குபடுத்தல் வரைச்சட்டத்தினை தரமுயர்த்துதல், உலகிலுள்ள விருத்தியடைந்த விவசாய நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் வகையில் புதிய சட்டங்களை இயற்றுதல் மற்றும் விவசாய வணிகத் துறையில் புலமைச் சொத்து உரிமைகளை பாதுகாத்தல் என்பவற்றுக்கான தேவை உள்ளது.

முடிவுரை

இவ்வாய்வானது இலங்கையின் விவசாயவணிகத் துறையானது காரணி நிலைமைகள், தொடர்பு பட்ட மற்றும் துணைபுரியும் கைத்தொழில்கள், உபாயம், கட்டமைப்பு மற்றும் போட்டி தொடர்பான பல்வேறு வரையறைகளைக் கொண்டுள்ளது என்பதனைக் காட்டுகின்றது. இதைவிட, நிறுவன ரீதியான ஒழுங்கமைப்பும் கொள்கைச் சூழலும் விவசாயவணிகமானது செயற்றிறனாகவும் வினைத்திறனாகவும் விரிவடைவதற்கு சாதகமாகக் காணப்படவில்லை. உலக சந்தையில் காணப்படும் கேள்வி நிலைமைகள் இலங்கையின் விவசாயவணிக விரிவாக்கத்திற்கு சாதமாகக் காணப்பட்ட போதும் உள்நாட்டில் காணப்படும் காரணிகள் கைத்தொழிலுக்கு வரையறைகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இவ்வாய்வானது விவசாயவணிக அபிவிருத்தியைப் பாதிக்கும் நான்கு காரணிகளுடன் இசைந்து செல்லும் வகையில் மேற்கொள்ளப்படவேண்டிய பல்வேறு கொள்கை நடைமுறைகள் குறித்து வெளிப்படுத்துகின்றது. விவசாயவணிக அபிவிருத்தியில் காணப்படுத் பெரும்பாலான வரையறைகள் பாரம்பரிய விவசாய முறைமையில் காணப்படும் அடிப்படையான பலவீனங்கள் மற்றும் கொள்கை உருவாக்கலில் காணப்படும் இயக்க ஆற்றலின் போதாமை என்பவற்றுடன் தொடர்புபட்டுக் காணப்டுவதால் ஒரு வெற்றிகரமான விவசாயவணிக அபிவிருத்தியானது ஒரு எண்ணக்கரு ரீதியான மாற்றத்தினை தேவைப்படுத்துகின்றது. விவசாயவணிக அபிவிருத்திக்குத் தெளிவாகத் தடையேற்படுத்தும் ஊக்குவிப்புக்கள், மானியங்கள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றின் ஊடாக சீவனோபாய விவசாயத்தினை பாதுகாப்பதில் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ளும் எந்தவொரு அரசாங்கத்திற்கும் இது ஒரு சவாலாகும்.

தமிழாக்கம்
கோ.அமிர்தலிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்
பொருளியல் துறை
கொழும்புப் பல்கலைக்கழகம்

ஆசிரியர்

கலாநிதி அனோமா ஆரியவர்த்தன

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பொருளியல் மற்றும் வணிக முகாமைத்துவத் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரியும் திருமதி. அனோமா ஆரியவர்த்தன அவர்கள் தனது கலாநிதிப் பட்டத்தினை நியுசிலாந்தில் உள்ள மசே பல்கலைக் கழகத்தில் பெற்றுக் கொண்டார். விவசாயப் பொருளியல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பன அவர் சிறப்புத் தேர்ச்சிபெற்றுள்ள பாடப்பரப்புக்களாகும். கலாநிதி ஆரியவர்த்தன அவர்கள் புகழ்வாய்ந்த சஞ்சிகைகளில் பல்வேறு ஆக்கங்களை வெளியிட்டுள்ளார்.

பதிப்பு உதவி: செல்வி. பிரியன்வதா ஹேரத்

பாத்பைண்டர் மன்றம்

தொலைபேசி | 2596281
பெக்ஸ் | 2595894
மின் அஞ்சல் | info@pathfinderfoundation.org
இணையத்தளம் | www.sanvada.org / www.pathfinderfoundation.org

ஆசிரியபீட உதவியாளர்: திருமதி.அமீரா கரீம் / திட்ட முகாமையாளர்